Regd. No. M 5623 KURAL MALAR Thirukkural Tamil Weekly

குறள்மலர்

ஆசிரியர்: திருக்குறள் வீ. முனிசாமி ★ துணை ஆசிரியர்: வே. ஆனைமுத்து

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1981, ஆவணி, 9
25-8-50 வெள்ளி | இதழ் 7

களிப்பாட்டத்தில் துள்ளாதே!

"நாம் நினைத்தபடியே வெற்றி கண்டுவிட்டோம்; நம்மை யார்தான் இனி அசைக்கமுடியும்? ஆ! உள்ளம் கொள்ளும் பூரிப்புதான் என்னே!" என்று–இப்படியாக மகிழ்ச்சி மயக்கத்தில் இருப்போர் பலருண்டல்லவா? அவர்களுக்குத்தான் ஆசிரியர் வள்ளுவனார் எச்சரித்தும் அச்சுறுத்தியும் கூறுகின்றார்.

'கொஞ்ச காலத்திற்கு முன் நடந்ததை நினைத்துப் பாரப்பா' என்று பதமாகக் கூறுவது போல, குறிப்புக் காட்டுகின்றார்.

"உன்னைப்போலவேதான் பலரும் இந்த மாதிரியே களிப்புக் கூத்தில் மயங்கி இறுமாந்திருந்து மறைந்துபோனார்களே அவைகளை நினைத்துப்பார்'—என்கிறார் ஆசிரியர்.

'இந்த இன்பம் உன்னை மதிமயங்கச்செய்து, செய்வன செய்யாதிருக்கும் மறதியினையும் உண்டாக்கிச் சீரழியச் செய்துவிடுமே' என்பது உள்ளடங்கிய குறிப்பு.

இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

[தம் மகிழ்ச்சியின் - தம்முடைய களிப்பில் (மகிழ்ச்சியில்), தாம் மைந்துறும் போழ்து - தாம் செறுக்குக் கொண்டு இறுமாந்திருக்கும்போது இகழ்ச்சியின் - (முன் சந்தர்ப்பத்தில் அந்தக் காரணத்தினால்) மறதியேற்படவும் இகழ்ச்சியுங்கொண்டு, கெட்டாரை - கெட்டுப்போனவர்களை, உள்ளுக - நினைத்துப் பார்ப்பாயாக)

T21210
R004F03

வள்ளுவர் வழிப்பயணம்

'திருவிழு'

முன் சுருக்கம் :—[காலையில் புறப்பட்ட ஆசிரியர் வள்ளுவனார், உழவர்களின் காட்சியினையும் உழவுத்தொழிலினையும் அளந்து பேசி, வரும்பொழுதெல்லாம் கண்ட ஐந்தாறு நிகழ்ச்சிகளில் அறியவேண்டிய நுணுக்கங்களையும் விளக்கிப்பின், ஏரியொன்றின் கரையோரமாக வந்துசேர்ந்தார். ஏரியினைக்கண்டு புதுமையும் உண்மையும் நிறைந்த உரைகளைப் புகன்று—பின்னர், இருவர் பேசிக்கொண்டு போகும் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டே நிற்கின்றார்.]

அந்த இருவரும் பேசிக்கொண்டே செல்லும் போக்கினையும், அவர்கள் யாரைப்பற்றி அவ்வாறு குறித்துக் குறித்துப் பேசிச் செல்லுகின்றனர் என்பதையும் ஆசிரியர் எளிதில் உணர்ந்து கொள்ள முடிகிறது. "அவனை என்னவென்று நினைத்திருக்கின்றீர்கள் நீங்கள். ஏதோ பணக்காரன் மாதிரி இருக்கிறானே தவிர பெரிய கடன்காரனுங்க அவன். நேற்றுகூட வழக்குத்தொடர்ந்து அவனைத் தண்டித்துவிடுவார்கள்போல் இருக்கிறது" இப்படிப் பேசினான் ஒருவன். இதைக் கேட்ட மற்றவன், "ஆமாம்—ஆமாம். இருக்கும் இருக்கும். பணம் ஏதோ சம்பாதித்துத்தான் இருக்கிறான். இருந்தாலும் ரொம்ப ரொம்ப மோசக்காரனுங்க அவன்" என்பதாகப் பேசினான். "நல்லா சொன்னீர்கள். நீங்கள்தான் பாருங்களேன். ஒருநாளைக்கு எத்தனை தரம் அவன் உடுத்திக்கொள்ளுவதும்—போவதும் வருவதும்—எல்லாம் மோசடி வேலைங்க" என்கின்றான் பதில் பேசும் மற்றவன். இதைக் கேட்ட அவன், "ஏதோ நமக்கும் தெரிந்தவன்தான். இருந்தாலும் சுத்த கபடனுங்க அவனை நம்பவே கூடாதுங்க" என்று மேலும் மேலும் பேசினான்.

இப்படிப்பட்ட வார்த்தைகள் ஆசிரியர் உள்ளத்தைக் கலங்கவைத்து விட்டன என்றுதான் கூறவேண்டும். யாரோ ஒருவனைப்பற்றி, அதுவும் தெரிந்த நண்பன் போல இருக்கும் ஒருவனைப்பற்றி இப்படிப் பழிசுமத்திப் பேசிச் செல்லுகிறார்களே என்று துன்புறுகிறார். இப்படி மற்றவனைப்பற்றிக் கேவலமாகப் பேசுவதிலேயே மகிழ்ச்சியடையும் ஈனத்தனத்தை நினைத்து நினைத்து ஆசிரியர் உள்ளம் வெதும்புகிறது என்றுதான் கூற வேண்டும்.

'[illegible]ர்களே! நீங்கள் மற்றவனைப் [illegible]க்கூறித் திரிகின்றீர்களே. இந்தப்படியாகத்தானே உங்களையும்பற்றி மற்றவன் பேசிக்கொண்டிருக்கின்றான் என்பதை மறந்தாபோய்விட்டீர்கள்'—இவ்வாறு எண்ணி வருந்துகிறது ஆசிரியர் உள்ளம்.

(புறங்கூறி வாழும் வாழ்க்கையினைப் போன்றதொரு அற்ப வாழ்க்கை எதுவுமே இருக்கமுடியாது. "**புறங்கூறாமை**" என்றொரு தனி அதிகாரம் திருக்குறளில் அமைக்கப்பட்டு கைவிளக்குப் போன்ற கருத்துரைகளை நம் வாழ்க்கையின் நல்ல உயர்வுக்காகவே போதிக்கப்பட்டுள்ளது.)

புறங்கூறுதல் என்னும் அறமல்லாத மிக மிகக் கொடிய பாதகச்செயலினை வன்மையாகக் கண்டிக்கும் ஆசிரியர் அவ்விருவரும் பேசிச் செல்லும் தன்மை **புறங்கூறுதல்** என்னும் புல்லர்கள் வழக்கம் என்பதை உணர்ந்துவிடுகின்றார். இப்படி நடப்பவர்கள் தமக்குத் தாமே கொடிய தீமையினை வரவழைத்துக்கொள்ளுகின்றோம் என்பதை மறந்து விடுகின்றார்களே என்று நினைத்து அப்படிப்பட்டவர்களின் பேதைமையையும் அறியாமையையும் கண்டு வருந்துகின்றார்.

பிறனைப் பற்றிப் பழித்துக் கூறும் அவர்களையுந்தானே மற்றவன் தூற்றித்திரிவான் - திரிகின்றான் என்னும் உண்மையினை அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுகின்றார். இதனை உலகிற்கு எடுத்துரைத்தல் சீரிய அறமாயிற்றே என்று அறிந்து அறியதோர் குறட்பாவினை நயமுடன் செய்து விடுகின்றார்:— மற்றவனைப்பற்றித் தூற்றிப் பழிகள் கூறித் திரியும் ஒருவன், தன்னுடைய பழிச் செயல்களையும் மற்றவன் பழித்தும் இழித்தும் திரித்தும் கூறும் நிலையினை உண்டாக்கி கொள்கின்றான் என்பது இக் குறட்பாவின்கருத்து.

பிறன்பழி கூறுவான் தன்பழி உள்ளும்
திறந்தெரிந்து கூறப் படும்.

இவ்வாறு பொன்னே போன்ற இன்னுரையினைத் தந்த ஆசிரியர் ஏரியின் ஓரமாகச் செல்லுகின்றார். ஏரிக்கு அடுத்தாப் போல வண்டிகள் போகும் பாதையொன்று போவதையும் அங்கு வண்டி போவதையும் காணுகின்றார். அவருடைய நோக்கமெல்லாம் அந்த வண்டியின் போக்கினையே கவனித்துக் கொண்டிருந்தது. ஆடாமல் அசையாமல் அந்த வண்டி போவதும் நிற்பதும் அப்படியும் இப்படியும் ஆடு[illegible]தும் - சாய்வதும் மேற்கொண்டு செல்லுவதுமாக இருப்பதையும் கூர்ந்து கவனிக்கின்றார். வண்டி நிறைய நல்ல பாரமான - பளுவான சுமை வைக்கப்பட்டிருந்தது. பெரியவண்டிதான்! இரண்டு நல்ல பெரிய காளைகள்தான் அந்த வண்டியினை இழுத்துக் கொண்டு சென்றன.

பாதையோ மிக மிக மோசமாகத்தான் இருந்தது. மேடும் பள்ளமுமாக இருந்த அந்தப் பாதையில் எப்படித்தான் அப்படிப் பட்ட சுமை கொண்ட அந்த வண்டியை அவைகள் இழுத்துச் செல்லும்? ஆனாலோ காளைகள் முயன்று முயன்று இழுத்துக் கொண்டுதான் போயின.

அவ்வளவுமோசமான அந்தப் பாதையோ மிகவும் சேறாக இருந்தது. அடிக்கடி சேறு நிறைந்த உளைகள் வேறு; பள்ளங்கள் பல. இத்தனையும் அந்தக் காளைகளுக்கு எவ்வளவு துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன! அடடா! சொல்லி முடியாது! சேறும் பள்ளமும் - மேடும் உளைகளும் நிறைந்த அந்தப்பாதையில் காளைகள் நின்று விடாமல் பக்கத்தில் சாய்ந்தும் நிமிர்ந்தும், மூச்சுப் பிடித்தும், கால்களை மடக்கியும் அரிதினும் அரிதான செயலினைச் செய்துகொண்டு-தம்முடைய வேலையினை எப்படியும் முடித்துக்கொண்டுதான் இருந்தன. இந்தக் காட்சி ஆசிரியரின் உள்ளத்தினை அப்படியே கவ்விக் கொண்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

உலக மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்தினையே குறியாகக் கொண்டிருந்த ஆசிரியர் உள்ளத்தில் ஏதேதோ எண்ணங்கள் புகுந்த வண்ணம் இருக்கின்றன.

[12-ம் பக்கம் பார்க்க]

முடியுமா ?

ஒரு மந்திரி ஆரம்பப் பாடசாலைகளை எல்லாம் பார்வையிட்டு அன்று மாலை ஆசிரியர்கள் கூட்டத்தில் பேசுகிறார்.

மந்திரி:—ஆசிரியர்களே! இன்று நான் எட்டு எலிமெண்ட்டரி பாடசாலைகளைப் பார்வையிட்டு வந்திருக்கிறேன். யாராவது—எந்த மந்திரியாவது செய்திருக்க முடியுமா? ஏன் சொல்லுகிறேன் என்றால் ஒவ்வொருவரும் தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான். மறுமுறையுந்தான் கேட்கின்றேன், எந்த மந்திரியாவது இப்படி செய்ததுண்டா ? செய்ய முடியுமா?

ஒரு ஆசிரியர்:— (கூட்டத்தில் எழுந்திருந்து) செய்யவே முடியாதுங்க; செய்யவும் கூடாதுங்க. இது டிப்டி இன்ஸ்பெக்டர் செய்ய வேண்டிய வேலைங்க...!

தீக்குறளைச் சென்றோதோம்!

(பெ. கனகாம்பிகை, பேராவூரணி)

[தலைப்பைக் கண்டு திகைப்பா? பழந் தமிழ் ஆசிரியமுறைப்பழக்கம் என மயக்கமா? இல்லை. இஃது உண்மை வரலாறு. நான் இருந்த ஊருக்கு வந்திருந்த டெபுடி கலெக்டரிடம் உரையாடி வீடுதிரும்பிய என் துணைவர் ஒருநாள் மாலை சிரித்துக்கொண்டே கூறிய நிகழ்ச்சி இது.]

டெபுடி கலெக்டர்: தமிழ் நூல்களை வீணே வான்அளாவப் புகழ்வது தான் மிச்சம். கதையோ புராணமோ இல்லாத நல்ல நூல் ஒன்று உண்டா?

துணைவர்: உண்டு. எத்துணையோ உண்டு. தலைசிறந்தது திருக்குறள்.

தாசீல்தார்: குறளையாச் சொல்நீர்? [சிரிக்கிறார்]

டெபுடி கலெக்டர்: தாசீல்தார்! என் சிரிக்கிறீர்?

தாசீல்தார்: ஸார்! நன்னாச் சொன்னார் இவர்! நேக்குத் தமிழ்ப் பாஷையிலே பஹு பரிச்சயம். குறளைவிட மோஸமான கதையே இல்லை. பெரியவா நன்னாச் சொல்லி இருக்கா. அதை ஓதப்படாதுன்னு.

டெபுடி கலெக்டர்: (குறுக்கிட்டு) என்ன சொல்லி இருக்கிறார்கள்?

தாசீல்தார்: இது மார்கழி மாஸமோன்னோ? நித்தியம் பிராதகாலத்தே என் விருத்தாப்பிய மாதா ஆத்திலே பாராயணம் பண்ணுவள். நானும் பண்ணுவன். திவ்ய ப்ரபந்தத்திலே ஆண்டாள் திருப்பாவை இரண்டாம் பாஸுரத்திலே நன்னாச் சொல்லி இருக்கா.

"செய்யாதன செய்யோம்; தீக்குறளைச் சென்று ஓதோம்" என்று

[துணைவருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை]

டெபுடி கலெக்டர்: என் சிரிக்கிறீர்?

துணைவர்: ஆண்டாள் கூறியது 'குறளை'; குறள் அல்ல. குறளை என்றால் 'கோள்'-'புறங்கூறல்' என்பது.

தாசீல்தார்: (கோபத்துடன்) 'குறளை' என்றது 'குறளைத்தான்'. 'தீக்குறளை' என்றது உமது 'திருக்குறளை'த் தான்.

துணைவர்: திருக்குறள், இனிக்கும் தீங்குறள்!

தீக்குறளை, கசக்கும் கோள்சொல்லுதல். தீக்குறளை ஒருவருடைய காதிலும் சென்று ஓதோம் என்றார் ஆண்டாள்.

தாசீல்தார்: நேக்கு இந்த அர்த்தம் பிடிக்கல்லே, ஸ்பஷ்டமா, நன்னாச் சொல்லி இருக்கா 'ஓதோம்' என்று!

துணைவர்: தங்கள் வயது சென்ற தாயையே கேளுங்கள். அவர்கள் வழக்கமாகச் சொல்லும் 'படி தாண்டாப் பத்தினி' என்பதற்கு 'அளக்கும்படியைத் தாண்டாத மனைவி' என்று தானே பொருள் என்று கேளுங்கள்.

[இரு அதிகாரிகள் உள்பட கூடி இருந்த அனைவரும் 'கொல்' என்று சிரித்தனர்.]

<u>தொடர்ச்சி</u>

அறத்துப்பால்] 1 [கடவுள் வாழ்த்து 7

தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது

[தனக்கு - தனக்கு, உவமை - ஒரு விதத்திலும் (சமம்) ஒப்புவமை, இல்லாதான் - இல்லாத கடவுளின், தாள் - அடிகளை, சேர்ந்தார்க்கு - சேர்ந்தவர்களுக்கு, அல்லால் - அல்லாமல், (மற்றவர்களுக்கு) மனக்கவலை - மனத்துன்பங்களை, மாற்றல்- நீக்குதல், அரிது - இயலாது, முடியாதென்பதாம்.]

இப்படியென்றும் அப்படியென்றும் உவமைகள்காட்டிக் கூறப்படும் தன்மை இல்லாதவனாக இருக்கும் இறைவனுடைய அடிகளைச் சேர்ந்தவர்களுக்குத்தான் துன்பங்களை நீக்குதல் முடியும்; மற்றவர்களுக்கு முடியாது.

விளக்கம்:—இறைத்தன்மை – இறைவன் என்பது ஒன்றே ஒன்றாகத்தான் இருக்கமுடியும். உதாரணங்களால் உவமைகாட்டி 'இதுபோலத்தான் அது' என்று கூறும் இயல்பு இறைவனுக்கு இருக்க முடியாது. 'தாள்' – 'சேர்தல்' என்ற சொற்களின் விளக்கம் முந்திய குறட்பாக்களில் விளக்கிக் கூறப்பட்டன.

தூய அறிவும் – நிறைந்த ஒழுக்கமும் – விருப்பு வெறுப்பு அற்ற தன்மையும் – ஆக இன்னபிற பண்பாடுகள் முழுதும் நிறைவு பெற்ற நிலை இருத்தல் அரிது ஆகையால், அத்தன்மையில் இரண்டு உண்டு என்று கூறுதல் இயலாத ஒன்று என்ற உண்மையில் வைத்துப்பேசும் ஆசிரியர் இறைவனை 'தனக்கு உவமை இல்லாதான்' என்ற தொடரில் குறித்துவைத்தார். இறைவன் தாளடிகளைச் சேர்ந்தவர்களுக்கு மனக்கவலையில்லாமல் இருக்கும் என்பது சிந்தித்து உணரவேண்டிய ஒன்று ஆகும். இயற்கையோடு இயைந்த காரணம் என்பது வெளிப்படையாக விளங்குகின்றது. கவலை என்பது மக்களுக்கு இயல்பாக ஏற்படுவதாகும். அதனைப்போக்க முயற்சித்தலும் மக்கள் கடமையாகும். இதனைப் போக்கும் வழி—மனதினைப் பண்புபடுத்திக் கொள்ளும் வழியில்தான் அமைந்துள்ளது. இறைவனைத் தூய மனமும் அறிவும் நிறைந்தவனென்றும் ஆசிரியர் விளக்கிக் கூறியுள்ளார்கள். எனவே அவன் வழியில் நிற்பவர்களும் மனக்கவலையினைப் போக்கிக் கொள்ள முடியும் என்பது தெளிவுபட, புலப்படுத்தப்படுகின்றது.

மனக்கவலை எக்காலத்தும் ஏற்பட முடியாது என்பதே குறிப்பு. அவ்வப்போது ஏற்படும் மனத்துன்பங்களைப் போக்கிக் கொள்ளும் முயற்சிகள் உண்டுதான் என்று பேசினாலும், இறைத்தன்மை நிலையினைப் பற்றிக்கொண்டிருப்போர்களுக்கே மனக் கவலையினை அறவே நீக்க முடியும் என்றும் அறிதல் வேண்டும்.

'தனக்குவமை இல்லாதான்' என்ற சீரிய உண்மையினைக்கொண்டு பல்வேறு வழிகளையும் கடவுள்களையும் பேதாபேதங்களையும் வைத்துக்கொண்டிருப்போர்கள் 'ஒருமை நினைவு' கொள்ளுதல் வேண்டும் என்ற நன்னெறி வற்புறுத்தப்பட்டது. இறைத்தன்மைப் பயனைக் கூறும் குறட்பாக்களில் இதுவும் ஒன்றாகும்.

தகுதியும் திறமையும்

தகுதி:—பாலு! உன் எஞ்சினியரிங் காலேஜ் அப்ளிகேஷன் என்னடா ஆச்சு?

திறமை:—போடா, போக்கிரி! 'ஆகஸ்டு' ஆன பிற்பாடுகூட இடம் எப்படிடா கிடைக்கும்? ஏதாவது போலீஸ் டிபார்ட்மெண்ட்லேருந்து 'கால்பார்' வருமாண்ணு பாக்கிறேன்.

தகுதி:—ஓகோ! நானே சப்-இன்ஸ்பெக்டர் செலக்ஷன்லே, 'அன் செலெக்டட்' ஆயிட்டேன். ஒன்னை எங்கடா அந்தமாதிரி வேலைக்கு செலக்ட் பண்ணப்போறானுய்ய[illegible]

[illegible]பாறப்[illegible]

சிறுவர் பகுதி

அண்ணனும் தம்பியும்!

[நண்பன்]

ஆற்றார் என்னும் கிராமத்தில் ஏழைக்குடும்பத்தில் கறுப்பன் என்பவனும் அவனது தம்பி காத்தான் என்பவனும் இருந்து வந்தார்கள். அந்தக் குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்துவந்ததால் கறுப்பனும் காத்தானும் தினசரி ஏதாவது கூலிவேலைசெய்து பிழைத்து வந்தார்கள். பயிரிடும் கூலிவேலைசெய்து வந்த அவர்களுக்குப் பலமாதங்களாக வேலை இல்லாமலேயே போய்விட்டது. அந்தப் பக்கத்தில் மழையே இல்லாதகாரணத்தால் பயிர்த் தொழில் செய்வதையே விட்டுவிட்டு மக்கள் பஞ்சத்தில் வாழ முடியாமல் வெளியூர்களுக்குச் சென்று பிச்சையெடுத்தாவது பிழைக்கலாம் என்று நினைத்து ஊரைவிட்டு வெளியே போக ஆரம்பித்துவிட்டார்கள். கறுப்பனும் காத்தானும் கலியாணம் ஆகாதவர்கள் ஆனபடியாலும் வாலிபர்களானபடியாலும் தாங்களும் எங்கேயாவது வெளியூர்சென்றுவிடலாம் என்று முடிவு செய்துவிட்டு அண்ணனும். தம்பியும் ஆற்றாரைவிட்டுப் புறப்பட்டு விட்டார்கள்.

பலப்பல ஊர்களுக்குச் சென்று பார்த்தார்கள். கூலிவேலைகூட சரிவரக் கிடைக்கும் இடங்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இப்படியாகப் பல கிராமங்களைச் சுற்றிய அவர்கள் கடைசியாக பணப்பேட்டை என்ற ஒரு கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அந்தக் கிராமம் மிகவும் சிறிய கிராமமாகத்தான் இருந்தது. நன்றாகச் சாப்பிட்டு பலநாட்களானபடியால் மிகவும் களைப்புடனும் கவலையுடனும் இருந்த கறுப்பனும் காத்தானும் அங்கே இருந்த ஒரு சிறிய மாரியம்மன் கோயில் வெளிப்புறத்தில் படுத்தார்கள். படுத்துக்கொண்டு இருந்த இருவரும் ஏதோ பேசிக்கொண்டு இருந்தார்கள்.

வழக்கம்போல் அந்த கோயிலுக்கு [illegible]ழவி ஒருத்தி அன்றைய தினம் கோவிலுக்கு வந்தாள். யாரோ புதிய ஆட்கள் மாதிரி இருப்பதைக் கண்டாள். அந்தக் கிராமத்தில் பரம்பரையாக இருந்துவரும் கிழவிக்கு அநேகமாக அந்தக் கிராமத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லோரையுமே தெரியும். இந்தப்புதிய ஆட்களைப் பார்த்தவுடனே அந்த அம்மாள் அவர்களைப் பார்த்து, 'யாரப்பா நீங்கள்? எந்த ஊர்? எங்கே இங்கு வந்தீர்கள்?" என்று கேட்டாள். இதைக் கேட்டதும் கறுப்பனும் காத்தானும் கொஞ்சம் மகிழ்ச்சியடைந்து, அந்தக் கிழவி பேசுவதிலிருந்தே மிகவும் நல்லவளென்று தெரிந்துகொண்ட அவர்கள் தங்கள் கதையை முழுதும் சொல்லி அழுதார்கள. இதைககேட்ட அந்தப்பாட்டி இருவரையும் தனது வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனாள். கறுப்பனும் காத்தானும் அன்றைய தினம் மனத்திருப்தியுடன் நிம்மதியாகச் சாப்பிட்டார்கள்.

அந்தப் பெரியம்மாளுக்குக் குழந்தை குட்டிகள் ஒன்றுமே இல்லை. பூர்வீகச் சொத்து கொஞ்சம் இருந்தது. பயிரிடவேண்டிய நிலங்களும் இருந்தபடியால் காத்தானையும் கறுப்பனையும அங்கே வேலையிலேயே அமர்த்திக்கொண்டு விட்டாள் அந்தப் பெரியம்மாள். கருப்பனும் காத்தானும் இப்படியாகச் சில மாதங்கள் இருந்துவருகையில் அந்தக் கிழவியின் வரலாறுகளைப்பற்றியும் குடும்பசொத்து முதலியவைகளைப்பற்றியும் அந்த ஊரார் பேச்சிலிருந்து தெரிந்துகொண்டார்கள்.

மேலும் மேலும் இரகசியங்களை எல்லாம் அண்ணனும் தம்பியும் விசாரித்துத் தெரிந்துகொண்டு வருகையில் ஒரு பெரிய ரகசியம் எப்படியோ அவர்கட்குத் தெரிந்துவிட்டது. அந்தப் பெரியம்மாள் வீட்டுத் தோட்டத்தில் ஒரு கிணறு இருந்தது. அந்தக் கிணற்றில்தான் குடிப்பதற்குத் தண்ணீர் எடுக்கிற வழக்கம்.

அந்தப் பெரியம்மாள், யாருக்கும் தெரியாமல் ரொம்ப நாட்களுக்கு முன்னதாகவே தன்னுடைய குடும்பத்திலிருந்த பவுன் நகைகளையும் மற்ற வெள்ளிப்பாத்திரங்களையும் ஒரு பெரிய பெட்டியில் போட்டு நன்றாகக் கட்டி அந்தக் கிணற்றுக்குள் போட்டு வைத்திருந்தாள். இந்த இரகசியத்தை எபபடியோ புலன் விசாரித்துத் தெரிந்துகொண்டு விட்டார்கள் இவர்கள். அன்று முதற்கொண்டு கறுப்பனுக்கும் காத்தானுக்கும புத்தியும் யோசனையும் ஒரு மாதிரி திரும்ப ஆரம்பித்துவிட்டது. கெட்ட கெட்ட எண்ணங்களைக்கொண்டு திட்டம் போட ஆரம்பித்துவிட்டார்கள். தங்களைக் காப்பாற்றிய அந்தப் பெரியம்மாளுக்கே துரோகம் செய்துவிட்டு எப்படியும் அந்தப்பெட்டியைத் திருட்டுத்தனமாக எடுத்துப் போக ஒரு நாள் நிச்சயம் செய்துவிட்டார்கள்.

குறிப்பிட்ட அந்த நாளில் கறுப்பனும் காத்தானும கிணற்றருகே

[10ம் பக்கம் பார்க்க]

'ஈரோடுவாசி'

வாரப்பதிப்பு எழுதுவது.

தமிழ் நாட்டில்—தமிழ் மக்கள்—அதிலும் மிகப்படித்த தமிழ்மக்கள் எனப்படுவோர்களே, தமிழ்மறை என உலகம் போற்றும் திருக்குறளினை உணராமல் இருப்பது உண்மையே.

அதற்குப் பொறுப்பாளி தமிழ் மக்கள் அல்ல; தமிழ் புலவர்கள்தான்! திருக்குறளை எளிய நடையில், சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் தன்மையில் விளக்கிச் சொல்லி அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு தமிழ் மகனும் ஒரு குறளினையாவது மேற்கோளாக எடுத்துப் பேசும் நிலையை உண்டாக்கி இருக்க வேண்டியது நம் புலவர்கள்தான்!

இதுவரை எவரும் அம் முயற்சியில் ஈடுபடக்காணோம். "செயற்கரிய செய்வார் பெரியர்" என்பதற்கேற்ப நம் அன்பர் திருக்குறள் வீ. முனிசாமி அவர்கள் இவ்வரிய முயற்சியில் ஈடுபட்டுத் தமிழ் மக்களுக்குத் தொண்டாற்ற முன் வந்திருக்கிறார்.

தமிழ் மக்கள் படித்துப் பயனடைவார்களாக! வாழ்க "குறள் மலர்".

(3—8—50)

நாடாளும் நல்லுழவர்

— வே. ஆனைமுத்து —

உயர்ந்த ஒழுக்கமும், பரந்த வாழ்க்கைப் பயிற்சியும், நிறைந்த கல்வி கேள்விகளாலான அறிவுமுடைய பெருமக்கள் காட்டும் பாதையிலேயே உலகம் நடத்தல் நலம். பழங்காலத் தமிழகம், இந்நெறிக்கு முற்றும் ஒத்தே நிலவி வந்தது. எந்நிலையினராயினும், அவர் தரும் அறிவுரைகளையும், அறநெறியுரைகளையும் ஆளவந்தாரும் — ஆளப்பட்டோரும் ஒருபடக் கேட்டே நடந்து வந்தனர்.

ஆளும் தகுதி பெற்ற அரசரை அறிவுறுத்துவதுதான் ஆன்றறிந்த அறிவின் சான்றாண்மை என்ற அஞ்சாப் பண்பினைப் பண்டைத் தமிழ்ப்புலவர் பெற்றிருந்தனர். வறுமைவாட்ட வாடியகாலத்தும், வாய்ப் புகழ்ச்சிகளால் வளம்பெருக வழியுண்டு என்ற வாய்ப்பு நேர்ந்தவிடத்தும்; வலியாரை வழிப்படுத்துவது என்ற முயற்சி, தம் வாழ்வையே வறளச்செய்யுமோ என்ற அச்சம் நேருங்காலத்தும் நெஞ்சறிந்த மொழிகளைக்கூறத் தமிழறிஞர் அஞ்சினாரல்லர்.

'நமது நாட்டு மன்னன் வேற்றரசனோடு போரிடுகின்றான்; போர்க்களத்திலே நிற்கின்றான். மறப்பண்பு முந்துறுத்த, தோள்கள் தினவெடுக்க, வெற்றியின் பெற்றி கவர்ச்சிகாட்டப் போரிடுகின்ற அவன், நமது அறிவுரைகளைக் கேட்கமாட்டான்' என்று அன்றைய அறிஞர் நினைத்தனரா? 'வாயார வாழ்த்தி வழிபட்டோமாயின், நம் வாழ்வு வளப்படுமே' என்ற எண்ணத்தால் வாய்மையை நழுவவிட்டனரா?

'கொல்லும் படையையும் வெல்லும் போர்த்திறனையும் உடைய வேந்தன், தமிழே நிலமாய்ப், புலமையே உழுபடையாய், வாழ்க்கை நெறிகளே விளைபொருளாய்ப் பெற்றிருக்கும் பெருமை ஒன்றினையே கருதி, நமது அறவுரையினை அமைவுறக் கேட்பானா' என்று நினைத்தனரா? அல்லர்.

'மாற்றுநாட்டு மன்னனை மடக்கியாள விரும்புகின்றாய். அவனது மணிமுடி உனது காலடியில் காணக்கிடக்கவேண்டும் என்று மறம் பேசுகின்றாய். அத்தகைய பேரெண்ணம் வெற்றிபெறவேண்டுமானால் உன் கட்டாயக் கடமையை நீ செய்ய வேண்டும்.'

'படையைப் பெருக்கும் குடிமக்கள், குடிமக்களை வாழ்விக்கும் உழுபடைகள் இவற்றை நீ பாதுகாத்தல் வேண்டும். எருதுகாத்து, ஏர்பிடித்து, உழைப்பால் உணவைஆக்கி நாட்டுக்கு அளிக்கின்ற நல்லுழவர்களைப், பயிர்த்தொழிலாளர்களை நீ பாதுகாக்கவேண்டும். குடிவளப்படும்; படைபெருகும்; வெற்றிக் கொற்றம் பெற்றிதரும். அதனைச்செய்! எவ்வகைப்பட்டும் அதனைச்செய் !!' என்று கூறுகின்றனர் பழந்தமிழறிஞர்.

" பகடு புரந்தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுரந் தருகுவை யாயின் நின்
அடிபுரந்தருகுவர் அடங்காதோரே "

என்று சுருக்கிக்கூறிப் பேருண்மையைப் புலப்படுத்துகின்றார். அன்றைய அரசர்க்கும் இன்றைய அமைச்சர்க்கும் இப்பொன்னுரைகள் நன்னெறிகளைக் காட்டவன்றோ அமைந்தன! இன்றைய அமைச்சர்கள் அறிந்தனரா? அறிந்திலர்.

காணார், கேளார், கான்முடப் பட்டோர்; பேணுநர் இல்லோர், பிணிநடுக்குற்றோர்; ஆற்றா மாக்கள் — ஆகியோரது கொடிய பசிப்பிணியை மடிப்பவர் யாவர்? தாமும் உண்டு தமது சுற்றத்தாரையும் உண்பிப்பார் எவர்? நாட்டின் நற்பாதுகாப்பிற்கான படையையும், படையைப் பெருக்கும் குடியையும் பாதுகாத்து, வெற்றி வாங்கித் தந்தவர் எம்மக்கள்? எப்படி? — எதனால் அவ்விளைவினைத் தந்தார்கள்?

'வசதியில்லையே என்று அசைவு கொள்ளாமல், ஈரம் போகுமே என்ற ஏக்கத்தால் தாக்குறாமல், உழுது உழுது உணவை ஆக்கித்தரும் உழவர்களல்லவா அத்தனையும் ஆக்கித்தந்தனர்! அவர்களைப்போற்று; அவர்களது காட்சிக்கு எளியனாய்க் கருத்துக்கு இனியனாய் நட. நாட்டின் நாடி, நன்கு துடிக்கும்' என்று விளக்கமாகக் கூறினார் துளக்கற்ற அறிவினர் — தூய் தமிழ்ச் சான்றோர்.

வாரி பெருக்கிய வளத்தானும், எரி தோண்டிய ஏந்தலும், காடு அழித்து நாடு ஆக்கிய நற்றமிழரசரும் இப்பொன்மொழிகளைக் கேட்டனர் என்றால், இன்றைய ஆளவந்தார் அறிந்தனரா? அறிந்திலர்; அறியும் ஆற்றல் பெற்றவரும் அல்லர்.

"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்......"

என்று சிலப்பதிகாரச் செம்மல் இளங்கோ கிளந்ததும்,

" ஊன்றுசால் மருங்கின் ஈன்ற
அதன் பயனே "

என்று புறநானூறு தந்தார் புகன்றதும் மேற்கண்ட நல்லுரைகளின் உலகியலறத்தினை உருவாக்கித்தருகின்றன.

ஆளவந்தார் அறிந்தாரானால் ஆளப்படுவோர் அமைவுற்ற வாழ்வுபெறுவர்.

இன்றைய உலகின் மக்கள் தொகை கிட்டத்தட்ட இருநூறுகோடி ஆகலாம். வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக்கொண்ட மேல்நாட்டாருள் ஒருசில நாட்டார், ஆலைத் தொழிலின் அளவைப் பெருக்கிக் கொண்டேபோகின்றனர். வேறுசில நாட்டினர் உணவுப்பண்டங்களை உண்டாக்கும் தொழிலைப் புறக்கணித்து, இருப்புக் கருவிகளை இயற்றுவதிலேயே குறிக்கொண்டு நிற்கின்றனர். இரண்டொரு நாட்டினர் உணவைவிளைக்கும் உழவுத் தொழிலை உயர்த்திக்கொண்டே போகின்றனர். இன்றைய இரஷ்ய நாட்டினர் உணவுப் பொருள்களை மிஞ்சிய அளவு ஆக்கிவிட்டால், உலக நாடுகளே தம்அடிக்கீழ்வந்துவிடும் என்ற அரிய உண்மையை அறிந்த நிலையில், உழவுத் தொழிலினை வளர்க்கின்றனர்.

பர்மாவில் பயிர்த்தொழிலாளர்க்கு நிலம்!
இத்தாலியில் உழவர்கட்கு நிலம்!
காஷ்மீரில் வேளாளர்க்கு விடுதலை...
மெக்ஸிகோவில் உழவனுக்கு நிலப்பங்கு.
கம்யூனிஸ்ட் கொரியாவில் நிலப் பங்கீடு.

என்ற நிகழ்ச்சிகள் இரஷ்யாவைத் தொடர்ந்து நடக்கின்றன.

உலகமக்களில் 100க்கு 51 விழுக்காட்டிற்கு மேற்பட்டவர், விடுதலை வேட்கையுடையவராய்ப் பொதுஉடைமைக்கொள்கையினராய், வாழ்வியல், பொருளியல், அரசியல் துறைகளில் நிலவும் வேறுபாடுகளை வெறுத்துத் தகர்ப்பவராய் மாறிவருகின்ற

[8ம் பக்கம் பார்க்க]

விற்பனையாளர்கள்

4—8—50 இதழ் முடிய உள்ள பட்டியல்படி, விற்பனையாளர்கள் தங்கள் கட்டணத்தை உடனே அனுப்ப வேண்டுகின்றோம்.

18–8–50 இதழ்வரையில், அஞ்சல் வழியாக இதழ்களைப் பெறும் விற்பனையாளர்கட்கு, அவரவர் பெயர்களோடு கூடிய முழு முகவரியும் எழுதி அனுப்பினோம். 25—8—50 முதல்,

LOCAL AGENT,
"KURAL MALAR"

(உள்ளூர் விற்பனையாளர், 'குறள் மலர்') என்றே முகவரி எழுதி அனுப்பப்படும்.

அஞ்சல் நிலயத்திற்கு விற்பனையாளர்கள் தாங்களே நேரில் சென்று, ஒவ்வொரு கிழமையும் இதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம். இதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுவிட்டது. — பொறுப்பாளர்

குறள் மலர்

25—8—50] திருச்சி [வெள்ளி

அன்னத்தின் தூது !

அன்னத்தைத் தூதுவிட்டதாகத் தான் தமிழ்க் கதைகளில் காணுகின்றோம். அவளிடமிருந்து நளனிடம் சென்று வெற்றிகண்டுதான் வந்தது அன்னம். இது அந்தக் காலத்துக் கதை!

அன்னத்திற்காக இன்று அமைச்சர்கள் தூது செல்லுகின்றனர். 'அன்னங் கண்டது யாரப்பா?' என்ற வறுமைப் பல்லவி இன்று நாட்டிடையே நிலவுகின்றது. அவதிப்பட்ட-படுகின்ற மக்களுக்கு உதவ, அன்னம் அளிக்க, அன்ன நடைபோட்டு அதிகார வர்க்கங்கள் அசைந்து கொடுத்துக்கொண்டிருந்தால் ஆட்சிக்கு ஆட்டங்கண்டுவிடுமே என்பதை அவர்கள் அறியாதவர்களா?

அரிசி இல்லையே என்ற குறைகளை விட அனுப்புதற்கு வசதிகள் இல்லையே என்பதைக் கேட்கும்பொழுது தான் நமக்குக் குமுறலும் கொதிப்பும் உண்டாகின்றன. ஆரஅமர சிந்தித்தா இவ்வாறு பேசுகின்றனர் அமைச்சர் திருக்கூட்டங்கள்? பட்டினியால் மாய்கின்ற்னர் மக்கள் என்ற பரிதாபக் கூக்குரல் கேட்டவண்ணமிருக்க, இருக்கும் உணவுப் பொருள்களை எடுத்துவந்து கொடுக்கவும் வசதி இல்லையென்றால் 'புளிச்ச ஏப்பக்காரர்' பொறுமையுடன் பேசும் பேச்சென்றுதானே நாம் நினைக்கவேண்டும்.

தில்லிமாநகர் சென்ற நமது முதலமைச்சர், உணவுப் பெருக்கம் நிறைந்த மாகாண அமைச்சர்கள் ஆங்கு வீற்றிருக்கக் கண்டார்கள். கண்டு, அவர்பால் சென்று 'எமக்கு அனுப்பித்தாருங்கள்' என்று வினவ, அவர்களும் 'ஆம் அங்ஙனமே செய்வோம். போக்குவரத்து வசதிகள் கிட்டட்டும்' என்று விடையளிக்க, அங்ஙனமே நமது முதலமைச்சரும் ஈண்டு போந்து நடந்த வரலாற்றினை நவிலுகின்றார்.

இது என்ன நாடகமா? பசிக் [illegible]லைக் தாண்டவமாடும் நிலையில் தமிழகம் தவியாய்த் தவித்துக்கொண்டிருக்க, உணவுப்பொருள் வருதற்கு வசதிகள் கிட்டவில்லை என்று கூறுவது, நீரின்றி, நாவறண்டு தவிக்கும் ஒருவனைப் பார்த்து "அப்பா, அதோ குளம் நிறைய தண்ணீர் இருக்கிறது. நீயோ தவித்துக்கொண்டிருக்கிறாய். அதுவுந்தான் எனக்குத் தெரிகிறது. தண்ணீர் எடுக்க வெண்கலப்பாத்திரத்திற்கு ஆள் அனுப்பி இருக்கின்றேன். வந்தவுடனே உனக்குத் தண்ணீர் தருகின்றேன்"-என்று சாவதானமான பதில் கூறினால், அது அறிவுக்குப் பொருந்தியதுதானா?

கரும்பு பயிரிடப்படும் நிலங்களைக் குறைத்துக்கொண்டு நெல் பயிரிடக் கூடாதா என்று கேட்டால் அதற்கும் சாத்தியமில்லை என்று சொல்லிவிட்டார், கனம் முதலமைச்சர் அவர்கள்.

இன்று நாட்டிடையே கொள்முதல் வேலை பெரும்பாலும் ஒழுங்குபெற நடைபெறவில்லையென்றே கூறலாம். இதனைப் பலரும் ஒப்புக்கொண்டுதான் இருக்கின்றனர்; பேசியும் வருகின்றனர். இதற்கென்ன காரணம் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்துகொள்ள முடியவில்லையா? உணர்ந்திருந்தால் ஒழுங்கீனத்திற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

உணவு உற்பத்தியளவு கூட ஒரு விதத்தில் நமக்குக் கவலையுண்டாக்கவில்லை என்று கூறலாம்! பதுக்கி வைத்துக்கொண்டிருக்கும் பாதகர்களின் மனம் இரங்கவில்லையே என்பதை நினைக்கும்பொழுதுதான் நாம் பதறாமல் இருக்கமுடியவில்லை. அந்தந்த மாவட்ட கலெக்டர்களுக்கு அதி தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்யும் உத்தரவுகள் அனுப்பப்பட்டுள்ளன என்பதைக் கேட்டு ஆறுதல் அடைகின்றோம்.

'ஆட்சி எங்களுடையது!' என்று ஆர்ப்பரிக்கும் தோழர்கள் அதிகாரிகளுக்கு ஆவனசெய்து ஒத்துழைக்காவிட்டாலும் அடிப்படை சுயநலத்தில் 'உரிமையுடன் ஏமாற்றுதல்' செய்யாதிருக்க நாமும் பலருடன் கூடி வேண்டுகின்றோம். அமைச்சர்கள் வந்தால், முன்னே ஓடி ஆரம் போட்டு அறிமுகப்படுத்திக்கொள்ளும் அந்த நண்பாகள், 'கொள்முதல்' என்றால், கடிவாளம் கண்டதும வாய் திறவா பரிகள்போல் பதுங்கிக்கொள்ளுதல் அறமாகுமா? ஆண்மையுமல்லவே!

"ஆடு திருடியவன் அண்டையில் இருக்கிறான்; கோழி திருடியும்கூடக் குலாவுகிறான்" என்ற நாட்டுப்புறத்து நல்ல பழமொழியின் நாடகமன்றோ இன்று நடைபெறுகின்றது. பட்டினியும பசியும் ஏன் தாண்டவமாடாது?

பர்மாவிலிருந்து அரிசி வருமா என்றால் நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை என்று பேசவேண்டிய நிலையில் முதலமைச்சரின் பதில் வெளிவருகிறது. அன்னியன் ஆட்சி அகன்றுவிட்டது என்று பேசிக்கொண்டாலும், இன்று நம் தமிழகம்-தனக்கு அப்பாற்பட்ட அன்னியனை நம்பும் ஆபத்தான நிலையில்தானே இருக்கவேண்டியாகிவிட்டது. இதற்கு என்ன காரணம்?

தில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மகாநாட்டில் ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரியவந்து விட்டது! உணவு சம்பந்தப்பட்ட அலுவல் துறைகள் இனியேனும் நன்றாக நடைபெற வழிசெய்யவேண்டும் என்ற திட்டம் தீவிரமாகக் கையாளப்பட வேண்டும் என்று முடிவு கட்டி விட்டார்களாம்!

உணவு சம்பந்தப்பட்ட அலுவல்கள் மட்டுமென்ன? எல்லா அலுவல் துறைகளும் இந்தமாதிரிதான் இருக்கின்றன! பதுக்கி வைப்போர்களுக்குப் பயங்கரமான தண்டனைகள் கொடுக்கவேண்டும் என்ற முறையும் வழக்கம்போல் பல்லவியாகப் பாடப்பட்டுள்ளது. அன்னத்தின் பொருட்டு தூது சென்ற அமைச்சர் அவர்கள் தந்த 'வாசா கைங்கரிய' நன்மைகள் இவை. நடைமுறையில் பார்ப்போம்!

"சடையப்பா, கொஞ்சம் அன்னம் படையப்பா!" என்பார்களாம. "அதற்கென்ன தடையப்பா. உள்ளே போய், வேண்டியமட்டும் அடையப்பா!" என்பானும் காவற்காரன். இது ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழகத்தில் வாழ்ந்த சடையப்ப வள்ளல் கதையில் கூறப்படுவது. இந்தக் கதைகளைத்தான் பேசவில்லையென்றால், வேறு எப்படித்தான் நாம் ஆறுதல் பெறுவது?

தூக்குமேடையில்...

"என் தலையை நினைவாக மக்களிடம் காட்டு. அவர்கள், இதைப்போல், இனி எங்கே பார்க்கப்போகிறார்கள்"

—Danton

பின்னணி சங்கீதம்

"வீணை"

கலப்பு மணம்!

"அப்பவே சொன்னேன் சார்; மக்கள் கேட்டார்களா என் வார்த்தைகளை; ஐந்தாம் படை ஆட்களே தமிழ்மக்களைக் கெடுத்தார்கள். மானங்கெட்ட தமிழர்கள் கெட்டொழியட்டுமே" என்று ஒரு பெரியார் **1955**ல் பேசினால் நாம் ஆச்சரியப்படமாட்டோம். ஆனால் இந்த தமிழர்களுக்கு ஐம்பதிலும் விளையாது ஐம்பத்தைந்திலும் விளையாது. இல்லாவிட்டால், அவசரத்திற்கு, கையில் அகப்பட்டதைத் தூக்கித்தான் அடிக்க வேண்டும் என்று அருமையான புத்திமதி புகட்டிய அந்த நாள் (நம்) அமைச்சர் ராஜாஜி போதனையைக் கேட்டிருந்தும், இன்று "வேலையில்லை வெளியே போ" என்று தமிழர்களை விரட்டுவதற்கு அச்சாரம் அவர்கள் வாங்கிக் கொண்டதைக் கண்டும், சும்மா இருக்கிறார்களே இந்தத் தமிழர்கள்! இது மாதிரியான சந்தர்ப்பத்தில் ராஜாஜியின் அறவுரைகள் உன்னுதற்குரியன வல்லவா?

ஆனால் ஒன்று. 1955க்குப் பிறகு தமிழர்களுக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது! "சார்! என் வேலைக்கு ஆபத்து வந்துடுச்சிங்க. கொஞ்சம் சிபார்சு செய்யுங்க"—"சார்! நீங்கள் ஒரு வார்த்தை சொன்னா போதுங்க. எனக்குப் பிரமோஷன் ஆயுடுங்க"—என்பன போன்ற கவலையே தமிழர்களுக்கு இருக்காது. ஏன்? வேலை கிடைச்சாத்தானே இந்தத் தொந்தரவுகளெல்லாம்! நீ தான் ஆபீசுக்குள்ளே நுழைவதற்கும் தகுதி திறமை இல்லாதவனாகிவிட்டாயே! இது ஒன்றுதானா வந்திருக்கிறது? இன்னும் எத்தனையோ வரத்தான் போகிறது.

சில ஓட்டல்களில் "பிராமணாளுக்கு மட்டும்" என்று எழுதிய பலகைகள் தொங்கிக் கொண்டிருந்தன; இப்பொழுது கூட இருக்கின்றன என்றுதான் நினைக்கின்றேன். இந்த மாதிரியான பலகைகளுக்கு எதிர்காலத்தில் அதிக கிராக்கி இருக்கப் போகின்றது. சில ஆபீசுகளில் முன்புறத்தில் இது மாதிரியான பலகைகள் இன்னும் சில ஆண்டுகளில் தொங்கிக் கொண்டிருக்கத்தான் போகின்றன! தொங்கட்டும்!!

தகுதியும் திறமையுந்தான் இல்லையே தமிழர்களுக்கு - ஆனால் இவர்களுக்கு என்னதான் வழியாம் என்று சிலர் பயப்படுகிறார்கள்; பயப்படவேண்டாம். வழியிருக்கிறது.

அந்தக்காலத்திலேயே "கலப்பு மணம் வேண்டும். கலப்புமணம் வேண்டும்" என்று கூறினேமே அதைப் பின்பற்றினார்களா தமிழர்கள்? இல்லை; இல்லை. ராஜாஜிக்குக் கூட நன்றிசெலுத்தவேண்டும் இந்த விஷயத்தில்! தகுதி திறமை இல்லாத தமிழர்கள், தகுதியும் திறமையும் உள்ள சமூகத்திலிருந்து அதை வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்! அதற்கு ஒரே வழி கலப்புமணந்தான்! தகுதியும் திறமையும் உள்ள சமூகத்தில் தமிழர்கள் கஷ்டப்பட்டாவது கலந்துகொள்ளத்தான் வேண்டும்! என்ன செய்வது! வேறுவழியில்லையே! இதைக்கேட்டதும் பல தமிழர்களுக்குக் கடுங்கோபம் வந்துவிடலாம்.

"என்னாங்க, போயும்போயும் இப்படிச் சொல்லிவிட்டீர்களே! தமிழர்கள் உருப்படவா இதுவழி?" என்றுசிலர் கேட்கலாம். அப்படிச் சொல்லிவிடக்கூடாது அவசரப்பட்டு! கொஞ்சநாளைக்காவது அவர்களோடு கலந்து தமிழர்கள் தகுதியும் திறமையும் பெற்றுக்கொண்டு வந்துவிட்டாலும் எனக்குத் திருப்திதான்! அந்த விஷயத்தில் அந்தச் சமூகத்தினர் தமிழரோடு ஓடி வந்து ஒத்துழைப்பார்களென்று உறுதி கூறுகின்றேன். பரோபகார சிந்தனையுள்ளவர்களல்லவா?

எங்கே பார்ப்போம்— தமிழர்களே! பிற்போக்கு இனத்தவர்களே முயற்சியுங்கள்! வெற்றி உங்களுடையதே! இதற்குப் பணம் தான் வேண்டும் என்று நியதியில்லை. பலந்தான் வேண்டும்— தகுதியும் திறமையும் உடனே வந்துவிடும். அவரவர்கள் அந்தந்த ஊர்களில் முயற்சியுங்கள்! எப்படித்தான் பெறுவதாம் தகுதியும் திறமையும்...சும்மா இருந்தால்!!

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்று நினைவு வருகிறது. "பார்ப்பான் உழவேண்டும்; பாப்பாத்தி நடவு நடவேண்டும்" என்று ஒரு சட்டசபை உறுப்பினர் கூறினாராம். நான் வருந்துகிறேன் இதைக் கேட்டு!

நீங்கள் 'குறள் மலர்' உறுப்பினராகிவிட்டீர்களா?

பொறுக்குமணி

வாழ்க்கையின் முப்பேரிலக்குகளான அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையுங் குறித்து ஆக்கப்பட்ட 1330 குறுஞ் சொற்றொடர்களைக் கொண்ட **திருவள்ளுவர் திருக்குறள்** உலக இலக்கியங்களிலேயே பொறுக்கி எடுத்த மணிகளில் ஒன்றாகும். பௌத்தர்களும், சமணர்களும், வைஷ்ணவர்களும், சைவர்களும், பறையர் வகுப்பைச் சேர்ந்த புலவரான அம் முனிவரைத் தத்தம் சமயத்தைச் சேர்ந்தவர் என்று உரிமை கொண்டாடுகின்றனர். அவர் அவற்றில் எச்சமயத்திற்கும் உரியரல்லர் ஆனால், எல்லாவற்றிற்கும் அவர் ஒருங்கே உரியவர் என்றே கூறலாம். சாதி, வகுப்பு, சமயம் எல்லாப்பிரிவினைகளையும் அவர் கடந்துநிற்கின்றார்; அவர் கூற்றுக்களோ, மக்கட் குழுவிற்கே பொதுவாய் உரியவான நீதியும் அறிவுரையுமே ஆகும். எனவே, பல நூற்றாண்டுகளாகத் திருக்குறள், தான் பிறந்த நாட்டிலே பரந்துபடக் கற்கப்பட்டுக் கருந்தனமாக மதிக்கப்பட்டு வருவதுடன் பல மேல்நாட்டு அறிஞர்களாலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டு வந்துளது என்பதில் வியப்பொன்றுமில்லை. ஏறக்குறைய 1730-ஆம் ஆண்டளவிலேயே அதன் முதலிரு பால்களும் ஸி. ஜோஸப் பேஸ்கி பாதிரியாரால் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலமாகியவற்றில் மொழிபெயர்ப்புக்கள் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாய் வெளிவந்தன. 1803-ஆம் ஆண்டில் **காமெரர்** என்பவரால் ஜெர்மன் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது. ஆயினும் 1856-ல் வெளி வந்த **கார்ல் கிரௌல்** என்பாரின் ஜெர்மன் மொழி பெயர்ப்பே சிறந்ததாகும். ஜெர்மன் புலவரும் தேர்ந்த மொழிபெயர்ப்பாசிரியருமான **பிரெடரிக் ருக்கர்ட்** என்பவரால் சில குறள்கள் 1847-ல் மொழி பெயர்க்கப்பட்டன. யானறிந்த வரையில் ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஜி. யூ. போப்பு என்பாரின் மொழி பெயர்ப்பே மிகவுஞ் சிறந்ததாகும். போப்பு, தமிழ் வல்லவர் என்பது மட்டுமன்று; பல ஆண்டுகள் தமிழ் மக்களிடையே வாழ்ந்து வந்தவராதலால், அவர்கள்மாட்டு உண்மையன்புடையவர். திருவள்ளுவமுனிவரை மைலாப்பூரைச் சேர்ந்த யாரோ ஒருவர் என்று கூறுதல் தகாது; அவர் புகழ் அவர் பிறந்த நாட்டைக் கடந்து தொலைவிலுள்ள வெளிநாடுகளில் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே பரவி விட்டது.

—*Prof.* M. Winternitz.

நாடாளும் நல்லுழவர்

[5ம் பக்கத் தொடர்ச்சி]

னரே என்ற அச்சம், பணம்படைத்த நாட்டினரையும், ஆட்சித் திமிர்பிடித்த அரசியல் சூதாடிகளையும், பிறப்பால் இழிவு கற்பிக்கும் பேதையுருவங்களையும் ஆட்டி வைக்கின்றது.

சில நாட்டினர் வகைகாண்கின்றனர்.
நம் நாட்டினர் திகைப்படைகின்றனர்.

கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளாகச் சுரண்டிவந்த, இரண்டாயிரத்துஎண்ணூறு தனி ஆட்சிகட்குக் குறையாத குறுநில மன்னர்களை (ஜமீன்களை) ஒதுக்கித்தள்ளிய ஆட்சியாளர், பல நூற்றுண்டுகளாகவே உண்டு கொழுக்கின்ற உருவத்தினராக - மூவாயிரத்து ஐந்நூறு தனியுடைமைகளை இலவசமாகவே இன்றுவரை துய்த்து வருபவராக-இனும்தாரர்களாக வாழும் சமயச் சழக்கரை வழிப்படுத்தி அத்தனை இனும்கட்கும் உரிய நிலங்களை அரசியல் பொது உடைமையாகவோ, உழவரின் தனியுடைமையாகவோ ஆக்கத்துணிவற்றவராகஉள்ளனர்.

தமிழ் நாட்டில், பண்படுத்தப்பட்ட நிலங்களில் பெரும்பகுதி, மடங்கள் கோயில்கட்கும், பெரும் பண்ணையாளர்கட்கும், இனும்தாரர்கட்கும் சொந்தமாக ஆக்கப்பட்டுள்ளன. பயிர்த்தொழிலே உயிர்த்தொழிலாகக் கொண்டு வாழ்ந்துவரும், இரண்டு நூறாயிரம் குடும்பத்தினர்க்கும் மேற்பட்ட மக்கள், சொந்த நிலமின்றி, கூலிக்காரர்களாகவே வாழ்கின்றனர்.

வயல் வேலைகளையும் வீட்டு வேலைகளையும் செய்யும் பண்ணையாட்களாகவும், குத்தகைக்காரர்களாகவும், வாரத்திற்குப் பயிரிடுவோராகவும் கட்டுண்டு மடிகின்றனர்-பலநூறாயிரவர். உழவர்களை ஊரை விட்டுக் கடத்தவும், அவர்களது வாழ்வையே பாழ்படுத்தவும் கூடிய உரிமை, நிலச் சொந்தக்காரர்களிடம் குவிக்கப்பட்டிருக்கின்றது.

கண்ணீர் கலக்கும் இந்நிலைபைக் கருதும் கருத்துடைமை ஆட்சியாளர்கட்கு இருந்தால், 'ஊர்சுற்றுப் பயணங்களை' உருவாக்குவதிலேயே நாட்டங்கொள்ளாது, ஆவன செய்வரா?

உணவுப்பெருக்கத் திட்டத்திற்காக கிணறு வெட்டும் திட்டம், கடன் கொடுக்கும் சட்டம் என்றெல்லாம் செய்தும் உழவர்களின் நலம் பெருகமுடியாத அளவு ஊழல்கள் வளர்ந்து வருவதைக்காணும் ஆட்சியாளர் எதும் செய்யமுன்வந்தாரல்லர்

முப்பதாண்டுகள் கழித்துப் பயன்தரப் போகும் தோப்புக்களை உண்டாக்குவதனுல், உடனே மழைவரலாம் என்று குருட்டுத் திட்டம் தீட்டி, பாட்டாளிமக்களின் வரிப் [illegible]ணத்திலிருந்து பல நூறாயிரம் மதிப்புள்ள [illegible] (Rupees) செலவு செய்து 'மரம்நடு விழா' செய்த ஆளவந்தார், பழைய காடுகள் பாழ்படுத்தப்படுவதையும், பாதுகாக்கப்படவேண்டிய காடுகளும் மலைப்பகுதிகளும் அழிக்கப்படுவதையும், கண்ணாரக்கண்டும் வாளாயிருக்கின்றனர்; வாய்திறவாது ஆள்கின்றனர்.

போக்கு வரவு வசதிகளைப் பெருக்குவதாகக் கூறித் தமது பணத்தைப் பெருக்கிக் கொண்டு போகும் போக்கு வரவுத்துறை முதலாளிகள், இயங்கி வண்டிகளின் உரிமையாளர்கள் (Bus Operators) மரக்கரித்தேவையை உண்டாக்கி, பெரிய தோப்புகளையும் காடுகளையும் அழித்தொழித்து மரக்கரி சுடும் தொழிலை வளர்த்துக்கொண்டே போவதை ஆட்சி மன்ற உறுப்பினர்களோ பொறுப்புள்ள பொது மக்கள் தலைவர்களோ கண்டிக்கக்காணும்.

'மரம் நடும் விழா' மாறி, 'காட்டுப் பாதுகாப்பு வேலை' தொடங்கப்பட்டால் உழவர் வாழ்வு உயர ஓரளவு வகை பிறக்கும்.

குடிசைத் தொழில்களை வளர்ப்பது குடிமக்களின் வாழ்வை உயர்த்துவது என்ற குருட்டுப்போக்கினராய், பல நூறாயிரங்கள் செலவில் குடிசைத் தொழில்களைப் பெருக்கத்திட்டமிடும் ஆட்சியாளர், நிலம் உழவும், நீர் இறைக்கவும், சேறடிக்கவும், விதை தெளிக்கவும், எரு இடவும், விதை சுமக்கவும் பயன்படக்கூடிய புதுப்புது இருப்புக் கருவிகளை முடிந்த அளவு வாங்கவும் — உழவர்கட்குத் தரவும் முயற்சி செய்தல் வேண்டும். பழைய முறையில் 'பயிர்த் தொழில் செய்வது ஒழிக்கப்பட்டு, அறிவியல் நெறியில் (Scientific method) ஆலைக்கருவிகளைக்கொண்டு உழவு செய்ய வழிகாண வேண்டும்.

பொதுஉடைமைக் கொள்கை பரவுகிறதே என்ற அச்சம், ஆளவந்தாரிடையே குடிகொள்வது வருந்தத்தக்கது.

உலக வாழ்விற்கே உயிர்நாடியான உழவை வளர்த்துவந்த பைந்தமிழரை, இழி தொழிலினர், புன்செயலினர், தாழ்ந்த குடியினர் என்றே மதித்து — நடத்தி — வாழ்வுபெற வழி வகுத்த மநுநெறி போற்றிய மாந்தரையே நம்பி, அவரது குறளை மொழிகளையே அறமெனக்கொண்டு பல்லாயிரம் ஆண்டுகளாக நம்மவர் நைந்தனர்.

பணம் படைத்தவரின் பக்கவலு தளர்ந்து விட்டால், பாராளுமன்ற இடங்களும், பட்டங்களும் தகர்க்கப்படுமே என்ற ஒரே அச்சத்தால் பாட்டாளி மக்களின் நிலையைப் பின்னும் நைய வைக்கின்றனர் ஆளவந்தார்.

இது தவறு.

"உனது நாடு, உலக நாடுகட்குத் தலைமை தாங்கவேண்டும் என்று நினைப்பாய். பலதரப்பட்ட ஆட்சியினரும், உன் ஆட்சி நிழலை அடையவேண்டுமென்று நீ கருதுவாய். அதற்கான முயற்சிகளையும் செய்வாய் — ஆனல் வேறு வகைகளில்! அது தவறு. பொது வாழ்வின் மேன்மையினைக் கருதாத புல்லர்கள் மொழியினை நீ தவிர்! நல்லறிஞர் — நாட்டு நலன் கருதுவோர் — மக்களின் மாற்ருள், மதிப்பிற்குரியோர் இவர்களின் அறிவுரைக்குச் செவிகொடு. உலகமே உன் ஆட்சிக்குள் வரவேண்டுமென்று எண்ணுங்கால், உழவே அதற்குத்தக்க வழி என்பதை உறுதியாக உணர்ந்துகொள்."

"நல்லுழவே நாடாளும்" என்ற திண்ணிய திறம்பட்ட நன்மொழிகளை நமது பழந்தமிழறிஞர்கள் இவ்வாறு டகர்ந்தனரென்ருல் அவர்வழி நடவாத நாடு முன்னேறுமா? முன்னேறத்தான் முடியுமா?

"நோதுமலாளர் பொதுமொழி
கொள்ளாது"

என்றனரே அந்நாள் அறிஞர், யாரைப் பார்த்து?

'பலகுடைநீழலும் தம்குடைக் கீழ்க்
அலகு உடை நீழலவர்' காண்பர்

என்ற பொய்யாமொழியார் வள்ளுவனர் பொன்மொழி எவரைநோக்கியது? நெல்லை விளைத்து (அலகு - நெற்கதிர்) நல்வாழ்வுக்கு வகைசெய்யும் உழவரையும், உழவரை உயர்த்த உறுதுணையாக அமைய வேண்டிய ஆளவந்தாரையும் நோக்கி அன்ருே?

கனி உதிர்ந்தது!

தமிழகத்தில் அறிவுக் கனி யொன்று உதிர்ந்து விட்டது என்றுதான் கூறுதல் வேண்டும்.

சேலம் மாவட்டம் தமிழுலகிற் களித்த பேரறிஞர் திரு. அ. இராமசாமி கவுண்டர் M. A., ஆவர். சேலம் கல்லூரியில் பல்லாண்டுகளாகக் கல்லூரித் தலைவராகப் பணியாற்றிய பெரியார் நம்மைவிட்டுப் பிரிந்தார் என்ற செய்தி யறிந்து திடுக்குற்ருேம். வடமொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழியறிவும் நிறைந்த மும்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்கள். திருக்குறள் பற்று மிகுந்திருந்த பெருந்தகையராய் விளங்கி, குறளறம் மக்களிடையே பரவ செயல் முறையில் நற்பணி பல செய்தார்கள். இசைப் பயிற்சியில் நுணுகி நுணுகி ஆராய்ந்த வல்லுநர். கணித அறிவின் சிகரமாய் நின்று சோதிடம் என்னும் கலையின் உண்மை, பொய்ம்மைகளை மிக நயமுடன் விளக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். அளந்து பேசும் சொல்லாற்றல்பெற்ற சொற்பொழிவாளரென்று போற்றப்பெற்ற பெரியார் மறைவு, தமிழகத்திற்குப் பெரும் நட்டம் உண்டாக்கி விட்டதென்றே கூற வேண்டும். அன்னர் குடும்பத்தினர்க்கு ஆறுதல் கூறுவதுடன், அவரது மூத்த மகனர் திரு. கண்ணப்பன் அவர்கள், மகன் தந்தைக்காற்றும் பெருமையுன்னி கடமையாற்றுமாறும் வேண்டுகின்ருேம்.

— ஆசிரியர்.

திரும்பித்தான் வரவேண்டும்!

—

ஆறுதலுக்காகச் சொல்லும் சொற்கள் அல்ல; அறநெறியின் அடிப்படையில் வைத்து இயற்கை நிகழ்ச்சிகளின் உண்மையினைத் தெளிவாக விளக்கிக்காட்டுகின்றார்.

'அநியாயமாகக் கொள்ளையடிக்கிறார்கள். எனக்குச் சேரவேண்டியதையெல்லாம் அவன் அடித்துக்கொண்டுபோகின்றானே' என்று இவ்வாறு மனம்நொந்து அழுகின்ற மக்கள் பலர் உண்டு. நேர்மையில் சம்பாதித்து வரவேண்டிய பொருள் போகின்றதே என்று உழலுகின்றனர். பணம் இழந்தவர்கள் பரிதவிப்பதுவும் இயற்கைதான்! ஒருவன் அழுதுகொண்டிருக்க, அவனைத் தன் பணத்தை இழக்கச்செய்து மற்றவன் கொழுத்துவிடுகின்றான். ஏமாற்றி - வஞ்சித்துச் சம்பாதிக்கும் பொருள் நீடித்து நிற்கும் என்று அவன் நம்பிக்கைகொண்டிருக்கின்றான். பேதை! யாராவது இதை எடுத்துச்சொன்னால் நம்பவேமாட்டான்.

ஆசிரியர் வள்ளுவனார் கூறுகின்றார். ஒருவன் அழஅழ, அழுதுகொண்டே இருக்க, மற்றவன் அப்படி அழுபவன் பணத்தைக் கொண்டுசென்றால், கொண்டு சென்றவனையும் அழவைத்துத்தான் அப்பணமும் அவனைவிட்டு நீங்கும். இது ஆசிரியர் வாக்கு. உண்மையிலும் உண்மை. பேதைகள் இவ்வுண்மைக்குச் செவிசாய்க்காமல் இருக்கலாம்

"அழக்கொண்ட எல்லாம் அழப்போம்......"

அது சரிதான்! வஞ்சித்தவனை அழவைத்துவிட்டு அப்பணம் அவனிடமிருந்து போய்விடலாம். ஆனாலோ! முதலில் கூறியபடி பணத்தை இழந்து அழுகின்றானே அவன் கதி என்னஆவது? நன்கு விளக்கிவைக்கின்றார் வள்ளுவனார்.

'இழந்தோம்' என்று அவன் வருந்தினாலும், அவன் நல்லமுறையில் பொருளீட்டி இருப்பானேயானால் நிச்சயமாக அவனுக்கு அப்பணம் எப்படியாயினும் வந்தே தீரும்- வந்துஆகவேண்டும். இது உலக இயற்கைச் சட்டம். மாறவேமுடியாது '...பிற்பயக்கும் நற்பாலவை' என்று குறள் முடிகிறது. உறுதியான இவ்வறவுரையினை உள்ளத்திற்கொண்டு வாழ்வார்களாக. வஞ்சிப்பவர்களுக்கு எச்சரிக்கை - வஞ்சிக்கப்படுவோர்களுக்கு நல்லுறுதி.—

அழக்கொண்ட எல்லாம் அழப்போம்
இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

தொடர்ச்சி

பொருட்பால்] 1 [இறைமாட்சி 7

**இன்சொலால் ஈத்து அளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு.**

[இன்சொலால் - இனிய சொற்களுடனே, ஈத்து - கொடுத்து, அளிக்க -காப்பாற்ற, வல்லாற்கு - வல்ல மன்னனுக்கு, இவ்வுலகு - இந்த உலகம், தன்சொலால் - தன்னுடைய புகழோடு பொருந்தி, தான் கண்டனைத்து - தான் நினைத்த அளவில் இருக்கும் என்பதாம்.]

இன்சொல் பேசும் பெருங்குணமும் ஈகைக் குணமும் மக்களைக் காப்பாற்றும் கடமையும் உணர்ந்து நடக்கும் மன்னனுடைய ஏவலின்படியே இவ்வுலகம் நடக்கும் என்பதாம். தனது விருப்பப்படியே நாட்டைக் காண முடியும் என்பது குறிப்பு.

விளக்கம் :—இவ் வுலகம் முழுவதையுமே அப்படிப்பட்ட மன்னன் ஆள முடியும் என்ற சிறப்பில் வைத்துக் கூறும் காரணத்தினால்தான், 'இந்த உலகமே அவன் எண்ணியபடி நடக்கும்' என்று கூறினார் என்க. நாட்டினை ஆளும் மன்னனை 'இவ் வுலகமே அமையும்' என்ற தொடரில் காட்டிப் பேசியதால், இன்றியமையாத நற்குணங்களின் மேன்மை உணர்த்தப்படுகிறது. மன்னவனை 'வல்லவன்' என்று குறித்து அதற்குக் காரணமாக முப் பெரும் பண்பாடுகளைக் கூறினார் அவையாவன :— 1. இன்சொல், 2. ஈதல் 3. அளித்தல். இவைகளெல்லாம் ஒரு தலைவனிடம் அமைந்திருத்தல் என்பது அருமையிலும் அருமையாகும். அளித்தல் என்பது காத்தலாகும். இவையனைத்தும் பொருந்தி இருந்துவிட்டால் மக்கள் எல்லோரும் உயிரினும் உயர்ந்த சிறப்புடன் அவனைப் பின்பற்றி நிற்பார்கள் என்பது வெளிப்படையான உண்மைதான். 'தான் நினைத்தபடியே மக்கள் நடந்துகொள்வார்கள்' என்ற குறிப்பில் வைத்துத்தான் 'தான் கண்டனைத்து இவ்வுலகு' என்ற தொடரினை அமைத்தார்.

ஈகையும் - இன் சொலும் எத்தகைய அறத்தினையும் மேன்மையினையும் பயக்கும் என்பதை யெல்லாம் மற்றபிற அதிகாரங்களில் காணமுடிகின்றது.

அளித்தல் (காத்தல்) என்பது இறைத்தன்மையில் எண்ணப்பட வேண்டிய குணங்களாகும். 'இறைமாட்சி' யென்ற இவ்வதிகாரத்திலும் காணப்படுவது மன்னனுக்கும் மக்களுக்கும் இருக்கின்ற அரிய தொடர்பினைக் காட்டுவதற்கே யாகும்.

கண்கள் கண்டேன்!

— நாரா. நாச்சியப்பன் —

பன்னீர்ப்பூக் கள்கொட்டிக் கிடக்கும் செம்மண்
பார்த்ததுபோல் அவள் வாயும் பல்லும் பார்த்துச்
சின்னேரம் நின்றிருந்தேன் அவளும் என்னைச்
செற்றழித்தல் போல்பார்த்தாள் கொல்லும் கண்ணாள்!
என்னேரம் பார்த்தாளென் றறியேன் சற்றே
இடம்விட்டுப் பெயர்ந்தேன் என் உள்ளம் மானின்
நன்னோக்கம் நாடிற்றுத் திரும்பிப் பார்த்தேன்
நடுங்கினேன் கூற்றமெனும் கண்கள் கண்டேன்!
நீராடித் தோழியர்கள் சூழ வந்தாள்
நீலமயில் போல், கூந்தல் பின் அலைய!
நேரோடி என்கண்கள் அவளைக் கண்டு
நீ என்ன சொல்கின்றாய்? விருப்ப முண்டா?
கூறேடி எனவினவக் கோபம் கொண்டு
கொஞ்சுமெழில் முகத்தைமிகு செந்தீ யாக்கிப்
போராடி வாவென்றே என்றன் பக்கம்
போக்கிவிட்ட வேல்போலும் கண்கள் கண்டேன்!
பூங்கொடியாள் அவள்தலையில் மலர்ந்தி ருந்த
பூங்கொத்தில் ஒன்றெடுத்து முத்த மிட்டேன்
பாங்கி யரு கிருந்ததை நான் மறந்து விட்டேன்
பாவைமுகம் தீயாகி உயிரை எல்லாம்
வாங்கிவிடும் நஞ்சாகி என்றன் பக்கம்
வந்தபொழு துள்ளமெலாம் பட்ட பாடு
பாங்கிஎழுந் தகன்ற பொழு தகன்று போகப்
பரிந்தென்னைப் பார்த்தஇரு கண்கள் கண்டேன்!

அண்ணனும் தம்பியும்!

[4ம் பக்கத் தொடர்ச்சி]

சென்று நின்றுகொண்டு யாராவது ஒருவன் உள்ளே இறங்குவதென்றும், இறங்கிப் பெட்டியை கயிற்றில் கட்டி விட்டால் மேலே இருப்பவன் கயிற்றை இழுத்துப் பெட்டியை வெளியில் எடுத்துவிடலாம் என்றும் தீர்மானித்தார்கள். அண்ணன் கறுப்பன், தன்னுடைய தம்பி, காத்தானை கிணற்றுக்குள் இறங்கச் சொன்னான். காத்தானும் கிணற்றுக்குள் இறங்கி விட்டான். கறுப்பன் பிறகு பெரிய கயிறொன்றை கிணற்றுக்குள் விட்டுத் தனது தம்பி காத்தானைக் கூப்பிட்டு "சீக்கிரம் கட்டிவிடு" என்று கூறிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கயிற்றை இழுத்து இழுத்துப் பார்த்தான். கயிறு பாரமாக இருந்தது. மிகவும் கஷ்டப்பட்டு அவசரம் அவசரமாகப் பெட்டியை வெளியே இழுத்துத் தள்ளிய கறுப்பன், மடமடவென்று கிணற்றருகே இருந்த பெரிய பெரிய கற்களை உருட்டிக் கிணற்றில் தள்ள ஆரம்பித்துவிட்டான். அடடா! எவ்வளவு கெட்ட எண்ணம் அந்த அண்ணனுக்கு! பணப்பெட்டியைப் பார்த்தவுடனேயே கறுப்பனுக்குப் பேராசை வந்துவிடவே, தம்பியும் அதில் பங்கு கேட்பானே என்று நினைத்துக்கொண்டு அவன் கிணற்றிற்கு மேலே வருவதற்கு முன்னேயே அவனைச் சாகடித்துவிடலாம் என்று இவ்வாறு செய்தான் கறுப்பன். பிறகு அந்தப் பெட்டியைப் பார்த்தான். மிகவும் பெரியதாகத்தான் இருந்தது. பிறகு பெட்டியைத் திறக்க ஆரம்பிப்பதற்கு முன்பதாகவே பெட்டியே தானகத் திறந்துகொண்டது. ஆ! என்ன ஆச்சரியம்! அப்பெட்டிக்குள்ளிருந்து கறுப்பனுடைய தம்பி காத்தான் வெளியே எழுந்தான். கறுப்பன் அசந்துபோய்விட்டான் "என்னடா தம்பி?" என்று ஆச்சரியமாகக் கேட்டான். "அண்ணே உன்னுடைய புத்தி இப்படிப் போகும் என்று நான் நினைக்கவில்லையே. நீ என்னையே கொல்லப்பார்த்து, கொலைபாதகனுக ஆகிவிட்டாயே" என்ருன் காத்தான். [illegible]றுப்பன என்ன சொல்லுவான். [illegible]வானு?

தொடர்ச்சி

காமத்துப்பால்] 1 [தகையணங்குறுத்தல்-7

கடாஅக் களிற்றின்மேல் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

[மாதர் - மாதருடைய, படாமுலைமேல் - சாய்தலில்லாத முலைகளின் மேல் காணப் படும், துகில் - ஆடையானது, கடா - கொல்லுவதாகிய, களிற்றின் மேல் - மத யானையின்மேல் இட்ட, கட்படாம் - முகப் படாத்தினை ஒக்கும்.]

மாதரின் மார்பகத்தின் மீது இடப்பட்ட ஆடை மதயானையின் முகத்தில் காணப் படும் துணியினை ஒத்திருக்கிறது.

விளக்கம்:-- அந்தப் பெண்ணினைக் கண்டு மயங்கி, அவளுடைய தோற்றத்தில் மயங்கிப் பேசும் ஆடவனின் உரைகளில் இதுவும் ஒன்ருகும். 'முலை' என்ற இச் சொல் திருக்குறளில் இரண்டு இடங்களில் தான் காணப்படுகின்றது. அவைகளில் இந்த இடம் ஒன்ருகும்.

யானையினுடைய கண்களை மறைத்துக் கொண்டிருக்கும்துணியாதலால்'கட்படாம்' என்று கூறப்பட்டது. கண் என்பதையும் துணி யென்பதையும் உட்கொண்டதே 'கட்படாம்' என்றறிக. கண்களை மறைத்திருப்பதே போல் மார்பகத்தையும் மறைத்துக் கொண்டிருக்கின்றது என்பதே குறிப்பால் உணர்த்தப்பட்டது. சாய்தல் இல்லாதவைகளாகக் கண்ட அந்த ஆடவன் 'படா' என்று பேசுகின்ருன் (படா-சாயாத) யானைகளின் வலிமைக்கு நிகராக மார்பகத்தையும் கூறுகின்ற எண்ணம் அந்த ஆடவனுக்குத் தோன்றுகிறது. யானையின் வலிமை பகைவர்களையே தாக்கும். அந்தப் பெண்ணின் மார்பகம் கண்டவர்களையே தாக்கும். அந்தப் பெண்ணின் மார்பகம் கண்டவர்களை யெல்லாம் வதைக்கும் என்பது உய்த்துணர வேண்டியதாகும். நாணத்தினுல் மகளிர் பார்பகத்தை மறைத்தல் இயல்புதான் என்ருலும், அவைகள் மறைக்கப்படாமல் இருந்தால் ஆடவரைக் கொன்று விடும் என்று நினைத்தே மறைத்திருப்பதாகக் கூறிவிடுகிருன் அந்தக் காளை. மதயானைகளின் கண்களை மறைத்திருக்கும் எண்ணத்தினைக் கொண்டு இவ்வாறு பேசுகின்ருன். அவைகளின் பெருமையினையும் கம்பீரத்தினையும் எண்ணுகின்ற அவன் "அவைகள் எந்தக் காலத்திலும் சாய முடியாது" என்று மயக்கத்தில் கூறினுனென்க.

சிறுவர்களே! பார்த்தீர்களா இந்தக் கதையின் போக்கினை! ஒருவனை ஒருவன் ஏய்த்துத் துரத்தத்தான் பார்த்தானேயன்றி சகோதரக் கட்டுப்பாடு என்கிற தொடர்பினை நினைத்தானு? தப்பியை ஏமாற்ற நினைத்தான் அண்ணன். அண்ணனை ஏமாற்றிவிட்டான் தம்பி. 'ஒன்றும் இல்லையே' என்று கையை விரித்து விட்டு உள்ளதையெல்லாம் மறைத்துக்கொண்டு ஓடிவிட்டான் தபபி, காத்தான்.

உலகில் நடைபெறுகிற வஞ்சக முய துரோகச் செயலும் எண்ணிலடங்கா. ஆதலால உற்ருர், உறவினர், நண்பர் போன்றவர்கள எல்லோரிடத்திலும் எச்சரிக்கையாக இருக்கவேண்டிபது நமது கடமையாகும.

இனம்போன்று இனமல்லார்
கேண்மை மகளிர்
மனம்போல வேறுபடும்.

[இனம்போன்று - உற்ருர் உறவினராகவே (போலவே), இனமல்லார் - (உண்மையான) இனப்பற்று இல்லாதவர்களுடைய, கேண்மை-நட்பு (உறவு), மகளிர்-பொதுமகளிருடைய, மனம்போல - மனத்தைப்போல, வேறுபடும் - வேறு வஞ்சக எண்ணங்கொண்டதாகவே இருக்கும். (பொதுமகளிர் - தாசிகள்)

நல்ல பிரசங்கி

சுந்தரம்:—சோமு! இவர் யார் தெரியுமா; பெரிய பிரசங்கியப்பா! அழகாகப் பேசுவார். மற்ற பிரசங்கிகளைப்போல ஒருமணி நேரம் இரண்டுமணி நேரம் பேசவேமாட்டார்!

சோமு:—அப்படியா! அதுதான் நல்ல பிரசங்கிக்கு அடையாளம். சிறந்த அறிவாளிகளால் தான் முடியும். நீ கேட்டிருப்பாயே இவர் பிரசங்கத்தை

சுந்தரம்:—அநேக தடவை கேட்டிருக்கேனே! இவர் பேசினல் மூன்று மணி நேரம் அல்லது நான்கு மணி நேரத்துக்கு மேலே போகவே மாட்டார்!

குரங்காட்டும் குரங்காட்டி !

(முனிவர்)

ஒரு குரங்கு, தன்னுடைய கையில் ஒரு பிரம்பை வைத்துக்கொண்டு எதிரில் இருப்பவனை ஆடச்சொல்லுகிறதாம்! இப்படியும் இருக்குமா என்று நினைக்கிறீர்களல்லவா? இருக்கின்றது, நடக்கின்றது என்று கண்ணால் கண்ட பெரியார் ஒருவர் சொல்லிப்போனார்.

அந்தக் குரங்கிற்குப் பயந்து அவனுந்தான் ஆடுகின்றானாம். எப்படி யெப்படி யெல்லாம் ஆடச்சொல்லுகிறதோ அப்படி யெல்லாம் அவன் ஆடுகின்றானாம்! ஏதாவது மறுக்க வேண்டுமே; அதுதான் இல்லை அவனிடம்-அந்தக் குரங்கு சொல்லுவதற்கு முன்பேயே அவன் செய்துவிடுகின்றானாம். ஆனால் ஒன்று; அந்தக் குரங்கும் நல்ல அனுபவம் நிறைந்த கிழக்குரங்குதானாம்.

உலகில் எல்லோரும் நடைமுறையில் பார்ப்பதற்கு நேர்மாறாக அல்லவோ இருக்கின்றது. குரங்காட்டித் தனது கையில் பிரம்பொன்றினை வைத்துக்கொண்டு குரங்குகளை ஆட்டி வைப்பதுதான் வழக்கம். ஆனால் இங்கு நடப்பதோ தலைகீழ்ப் பழக்கமாக இருக்கின்றது. இல்லாமலா சொல்லியிருப்பார், சொன்ன அந்தப் பெரியாரும்.

நேரிலேயே பார்க்கின்றதாகவே கூறுகிறார். யாரோ அந்தப் பெரியார் என்று எண்ணத்தை அதிகதூரம் ஓட்டிப்பார்க்க வேண்டியதும் இல்லை. நம்மிடையே இருந்த, வடலூர் அடிகளார் தான் இவ்வாறு கூறுகின்றார். அருட்பாவில் பார்க்க வேண்டிய அரியகாட்சி!

அப்படிப்பட்ட குரங்கினை வெறும் கிழக் குரங்கு என்று மட்டும் கூறி நிறுத்திவிடவில்லை.

"நெஞ்சக் கிழக்குரங்கு..."

என்று குறித்து விடுகின்றார். நெஞ்சமாகிய கிழக்குரங்கு — இப்படி ஆட்டுகிறதே! மனம்போனபோக்கில் தடுமாறித் திரிந்து தள்ளாடி மடியும் மக்கள் கூட்டம் கொஞ்சமாக இருக்க முடியுமா?

இப்படியாக ஒரு அதிசயத்தினைக் கண்டேன் என்று வியப்புற்றுக் கூறுகின்றார் இராமலிங்கனார். "உலகில் சிலர் குரங்கை ஆட்டிவைப்பதைத்தான் பார்க்கின்றேன். ஆனால் நானோ, குரங்கினால் — நெஞ்சக் குரங்கினால் ஆட்டிவைக்கப்படுகின்றேனே" என்று வேடிக்கைப் பலகணியில் வேதனையைப் பார்க்க வைக்கின்றார்!

தேட்டக்கண்டேர் மொழிப்பாகா உலகில்
சிலர் குரங்கை
ஆட்டக்கண்டேன் அன்றி அக்குரங்கால்
அவர் ஆடச்சற்றும்
கேட்டுக்கண்டேனிலை, நான் ஏழை
நெஞ்சக் கிழக்குரங்கால்
வேட்டுக்கொண்டு ஆடுகின்றேன் சான்ற
வியப்புடைத்தே !

குறள் மலர் வாழ்த்து

[திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.]

1. வேதமலர் நான்கினையும் வேதியர்கட் கென்றுரைத்த வேதன்தானும்
கீதமலர் ஒன்றினைமுன் அருச்சுனன்றன் கேட்டிடவே கிளந்தகோனும்
ஓதமலர் யாதுளதென் றுலகமெலாம் தேடிநனி யுவந்தேகண்டார்
போதமலர்க் குறள் மலரைப் புலவர்முனி சாமிகரம் பொலியக் கண்டார் !

2. உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணுகவென் றோரரசர் உரைத்த வார்த்தைப்
பண்பதனை நன்குணரின் பார்புகழும் தமிழ்நாட்டார் பரிந்தேயோடி
நண்புடனே அன்பர்தரும் நாண்மலராம் குறள் மலரை நாடிக்கொண்டே
சண்பகமோ மல்லிகையோ தாமரையோ என்றுமகிழ்ந் தின்பம் சார்வார் !

3. நிணம் நிறைந்த காடுநிகர் நெஞ்சுடைமா வஞ்சகர்கள் நீண்டகாலம்
குணம் நிறைந்த மாந்தரையும் குலம்நிறையாக் கோதினர் ஆம்எனவே கூறிப்
பணம் நிறைந்த பையினராய் நின்றகளை பறித்துயர்ந்த பண்பின் நேர்மை
மணம் நிறைந்த குறள் மலர் சேர் மலர்ச்சோலை முனிசாமி மகிழ்ந்திட் டிந்தார்!

4. தப்பாலே நோய்வளர்த்த மனுவாதிக் களைபறித்துத் தமிழ்நாடெங்கும்
மெய்ப்பாலாம் பயிர்வளர்க்க மேனாளில் வள்ளுவனார் மிகுந்திட் டார்வம்
முப்பாலாம் நீர்பாய்ச்சி மூலிகைநேர் **குறள்**வளர்த்தார் முதிர்ந்திட் டஃதே
இப்பாலோர் குறள் மலரை எப்பாலும் வாடாமல் ஈந்திட் டோங்கும்.

5. சாதியினால் உயர்வுரைக்கும் சாத்திரப்பேய் தடுமாறித் தங்காதோட
நீதியினால் அருள்நிறைந்த நீள்கோயில் ஒன்றமைத்தும் நினைந்தேவெண்பாப்
பாதியினால் வள்ளுவனார் பாங்குகுறள் கடவுள்தனைப் பதித்தார் அஃதைத்
தேதியினால் கிழமைதொறும் **குறள் மலரால்** தேர்ந்துரைத்துச்
சேர்ந்தே வாழ்வாம்!

6. தினைத்தனையாம் தேனுறையும் சிறுமலரிற் சென்றினிநீ திளைத்தற்காமோ ?
நினைத்திடலும் காண்டலுமே நெஞ்சுவந்திட் டோதலுமே நெகிழ்ந்திட்டேஎம்
அனைத் தெலும்பும் உள்நெகவே ஆநந்தத்தேன் சொரிந்து அமுதாய்ஊறும்
மனக்கினிய குறள் மலரின் மணத்தினிதே சென்றுறைவாய்
மனமாம் வண்டே !

7. அறம் பொருளோ டின்பமதை அருந்தமிழால் அன்றுரைத்த ஆசான்சொல்லின்
நிறம் பொருளைச் சீர்தூக்கி நேர்மையுடன் நீளுலகம் நினைந்தே போற்றும்
திறம் பொருளைத் **திருக்குறட்குச்** செப்புதலே தொண்டெனத்தேர்
சீரார்வாழ்வில்
புறம் பொடும்உள் தூய்மைமிகும் புலவர்முனி சாமிபுகழ் பொலிந்தே வாழி !!!

வள்ளுவர் வழிப்பயணம்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

மக்களில் பலரையும் சிந்திக்கின்றார். உண்மையறிந்துகொள்ள முடியாமல் அற்பமான சிறு சிறு தொந்தரவுகளுக்கெல்லாம் கவலை கொண்டு கதறும் பேதைகளான அவர்களை நினைத்துப் பரிதாபப் படுகிறார். "உலகம் அறியாத மக்களே!" என்று அவருள்ளம் நகைத்துக் கொள்ளுகின்றது.

இடுக்கண் (துன்பம்) வாழ்க்கையில் முன்னேறிச் செல்லுகையில் வரத்தான் செய்யும். அந்தத் துன்பங்களைக் கண்டு நாம் அயர்ந்து விடலாமா? மலைத்து நின்று விடலாமா? 'ஐயோ, என்னால் முடியாது போல் இருக்கின்றதே' என்று அஞ்சி விடலாமா? துன்பங்கள் பயங்காட்டுகின்றனவே என்று நடுங்கி விடலாமா? இடுக்கண்களையும் (துன்பங்களையும்) நாம் அல்லவா பயங்காட்டித் துரத்திவிட வேண்டும். ஊக்கமும் - விடாமுயற்சியும் - அறிவும் - உலக இயற்கையும் உணர்ந்த மக்கள் அவைகளைப் பொருட்படுத்தவே கூடாதல்லவா.

நல்ல மருந்தினை மக்களுக்கு அளிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட ஆசிரியர் அந்தக் காளைகளின் முயற்சியினையே எடுத்துக்காட்டாகக் கொள்ளுகின்றார். அவைகள் மேற்கொண்டு இழுத்துச் செல்ல எத்தனையோ தடைகள். ஆனால் பொருட்படுத்த வில்லையே அவைகள்! அந்தத் தடைகளையும் மிதித்து நொறுக்கிக்கொண்டல்லவா அந்தக் காளைகள் போய்க்கொண்டே இருக்கின்றன. அதுவே போலத்தான் நல்ல அறிஞர்களின் வாழ்க்கை முன்னேற்றத்தில் குறுக்கிடும் துன்பங்களும் துன்பப்பட்டே ஓடிவிடுமே. சிந்தித்துச் சிந்தித்து, பன்முறையும் எண்ணிப் பார்த்து நமது வாழ்க்கையினைச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற ஆசிரியருக்கு இவ்வுண்மை தோன்றி விடுகின்றது என்றால், அது வியப்பல்லவே. வண்டிகளை இழுத்துச் செல்லும் காளைகளைக் கண்டு வழங்கி விடுகிறார் ஒரு குறட்பா.

> மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற
> இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து

[மடுத்த - தடுத்த; பகடு - காளைகள்].

ஆ! எளிமை - இனிமை - நன்மை - புதுமை - அருமை - அத்தனையும் பொலிகின்றகுறளறம் நமக்குக்கொடுக்கப்பட்டது. வள்ளலாராகிய நம் வள்ளுவனார் இக்காட்சியினைக் கண்டு அறவுரை தந்தனர் என்றாலும் அவர் எண்ணங்கள் முடிவு அடைகின்றன என்று சொல்லுவதற்கில்லை. உலகத்தின் மக்கள் வாழ்வினை எண்ணிய வண்ணமே சென்றுகொண்டிருக்கின்றார்.

'குறள் மலர்'

(திருக்குறள் கிழமை இதழ்)

வெள்ளிதோறும் வெளிவரும்.

கட்டண விவரம்.

ஒரு ஆண்டுக்கு	ரூ.	6—0—0
அரை ஆண்டுக்கு	ரூ.	3—4—0

தனி இதழ் 2 அணா

விற்பனை உரிமை வேண்டுவோர் இதழ் ஒன்றுக்கு ஒரு ரூபாயாக முன்பணம் கட்டி விண்ணப்பிக்கவும். 5 இதழ்களுக்குக் குறைந்த விற்பனை உரிமை இல்லை. விற்பனையாகாத இதழ்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப் படும். V. P. P. இல்லை.

★

விளம்பர விழுக்காடு.

முழுப்பக்கம்	ரூ.	60—0—0
அரைப்பக்கம்	ரூ.	35—0—0
கால் பக்கம்	ரூ.	20—0—0
1 பத்தி 1 அங்குலம்	ரூ.	3—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு எழுதவும்.

மாலை நேரம் வந்துகொண்டிருக்கின்றது. மாலை நேர நிகழ்ச்சிகளே தனிப்பட்ட தன்மையுடையன என்பதை நம் ஆசிரியரா அறியாதவர்! வண்டி போகும் பாதையினை விட்டுச் சிற்றூர்களுக்குச்செல்லும் சிறு சிறு பாதைகளைக் காணுகின்றார். கூட்டம் கூட்டமாக ஆட்டு மந்தைகளின் தோற்றம் ஆசிரியர் கண்ணுக்குப் புலப்படுகின்றது. செவிகளுக்கினிய இன்னிசை வருவதை இன்பமுடன் கேட்டுச் சுவைக்கின்றார் ஆசிரியர். எங்கிருந்து வருகின்றது அந்த இனிய ஓசை? ஆம். ஆடுகளை ஓட்டிச் செல்லும் ஆயர்கள் புல்லாங்குழல் வாசித்துச் செல்லுகின்றனர். கடமைகளை முடித்துக்கொண்டு தங்கள் தங்கள் இல்லம் நோக்கிச் செல்லுகின்றனர். மாலை நேரமல்லவா? மகிழ்ச்சி பொங்குகின்றது; இன்னிசை இயக்குகின்றனர். காற்றில் கலந்து செல்லுகின்றது அந்த இசையோட்டம்! தொலை தூரத்தில் இருப்பவர்களும் மகிழ்ச்சியுறச் செய்யும் இசையல்லவா?

ஆசிரியர் இந்த ஓசையினைக் கேட்டார். மகிழ்ச்சி மட்டுமா அடைந்தார்! கவலையுந்தான் உண்டாயிற்று! பிரிந்திருக்கும் காதலர்களை நினைத்துவிடுகின்றார். அந்தோ! மாலை நேரத்தில் அந்தக் காதலி—தன்னுடைய காதலனைப் பிரிந்திருக்கும் காதலி வருந்தி வாதனைப் படுவாளே! இன்ப உலகம்—காதலர் வாழ்க்கை—இவைகளையெல்லாம் நினைவுறுத்தி விடுகின்றது அந்த ஓசை! மாலை நேரம் வந்து விட்டதே என்று அறிவுறுத்துகின்றதாம், அந்த ஆயனுடைய குழல்!

மாலை நேரம் வந்துவிட்டதே என்றுகூறுகின்றதாம் குழல். காதலி பேசுவதைப் போல் சொல்லப் போனால், மாலைப் பொழுதினை வரவழைக்கின்ற - அல்லது 'மாலைப் பொழுது—இதோ வருகின்றது' என்று சொல்லுகின்ற தூதுவனைப் போல அந்தக் குழலோசை இருக்கின்றதாம் காதலிக்கு! எவ்வளவு தூரத்திற்கு ஆசிரியர் இன்ப நய எண்ணங்கள் சென்று விடுகின்றன! உண்மைதான்! காதல் உலகம் அப்படிப் பட்டதாயிற்றே!

மாலை வருகின்றது என்றால் - இரவும் வந்துவிடும் என்றுதானே பொருள். இதில் என்ன வியப்பு இருக்க முடியும். காதலனும் இல்லையே; பிரிந்திருக்கின்றானே; ஆயன் குழல் மாலைநேரத்தை உணர்த்தவே இன்ப வேட்கை அழல் போலத் தானே அவளைக் கொதிக்க வைக்கும்? மாலை வந்த பிறகு இரவும் வந்தால், இன்ப நாயகன் இல்லாத பொழுது அவள் உயிர்வாதனைப் படுவாளல்லவா? அந்த வாதனையினைத் துவக்கித் தருகின்ற மாலையினையே அவள், தன்னைக் கொல்லும் படையாகவும் எண்ணி விடுகின்றாளாம். இத்தனை எண்ணத்தினையும் காதலியின் உள்ளத்தில் எழுவதாகக் கண்டுவிடுகின்றார் நமது ஆசிரியர். ஆயன் குழல் ஆசிரியர் பால் உண்டாக்கிய இன்ப நயக் கருத்தினைக் குறளாக அமைத்துக் காட்டுகிறார்.

> அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
> குழல்போலும் கொல்லும் படை.

இப்படியாக மாலைப் பொழுது வருகின்றது என்பதை நன்கு தெரிந்துணர்ந்த ஆசிரியரின் மனோநிலை எண்ணிறந்த நினைவுகளை உண்டாக்கி விடுகின்றன. மாலைப் பொழுதும் மறைந்து இரவு வந்து விடுகின்றது. வானத்தில் ஒளிவீசும் விண் மீன்களைக் காணுகின்றார் ஆசிரியர். மின்னும் விண் மீன்கள்; ஆம்! (தொடரும்)

அறிவுடைமையா ?

இந்துஸ்தானி யென்பது வடஇந்தியாவில் சிற்றூரிலுள்ள இந்துக்களாலும், மகம்மதியர்களாலும் பேசப்பட்டு தேவநாகரி அல்லது உருதுமொழி எழுத்துக்களால் எழுதப்பெறும் மொழி. இதேபோல் தமிழரும் தமிழெழுத்துக்களை மாற்றி இந்துஸ்தானியாக எழுத முயல்வது அறிவுடைமையா ?

ஆசிரியர் : திருக்குறள் வீ. முனிசாமி, வெளியிடுவோர் : ந. கணபதி (பெண்ணக்குணம்), அச்சிடுவோர் : வெ. மாணிக்கம் பிள்ளை, இம்பீரியல் அச்சகம், 1, பெரியகம்மாளத் தெரு, திருச்சிராப்பள்ளி.